# ECPAT ஸ்ரீ லங்கா ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான நேரலை பேச்சுப் போட்டி

## உங்கள் பேச்சு திறன்களைக் காட்ட விரும்புகிறீர்களா?

## உங்கள் எண்ணங்களை வெளிக்கொணர இதோ ஒரு வாய்ப்பு!

கோவிட் - 19 அனைவரது அன்றாட வாழ்க்கையிலும் பாரிய மாற்றங்களைச் சமாளிக்க நிர்ப்பந்தித்திருக்கிறது. கட்டாய தனிமைப்படுத்தலுக்குள்ளாகி, வீடுகளுக்குள் முடங்கி இருக்கும் சிறுவர்களுக்கு உற்சாகமூட்டும் வாய்ப்புக்களை ECPAT Sri Lanka வழங்கி வருகிறது. நாட்டின் பல் வேறு பகுதிகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களை கவர்ந்த ஒரு சித்திர போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்தது. வெற்றி பெற்ற அனைவருக்கும் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இப்போது, 8 முதல் 16 வரையான சிறுவர்கள் பங்கேற்க கூடிய ஒரு நேரலை பேச்சுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. இப் போட்டி சிறுவர்களது பேச்சு திறன்களை வளர்த்துக் கொள்ளவும் பணப் பரிசுகளை வென்றெடுக்கவும் ஒரு வாய்ப்பாகும். முடக்கல் மற்றும் சுய-தனிமைப்படுத்தும் நேரத்தில் சிறுவர்களின் நம்பிக்கை, விமர்சன சிந்தனை மற்றும் கலாச்சார புரிதலை ஊக்குவிக்கிறது. பேச்சு போட்டிகளுக்கான கருப்பொருள்கள் வயதுக்கு ஏற்ப கீழே கொடுக்கப்பட்டுள்ளன. உரைகளை தமிழ் மொழியில் வழங்க வேண்டும். பேச்சு மனன வடிவிலானதாக அமையவேண்டும்.

போட்டியாளர்கள் தங்கள் உரைகளைத் தயாரிப்பதில் சொந்த ஆய்வு செய்ய ஊக்குவிக்கப் படுகிறார்கள். அவற்றை தெளிவாகவும் சுருக்கமாகவும் உயிரூட்டமுள்ளதாகவும் பேசி, ஒரு நிமிட வீடியோ கிளிப்பின் மூலம் ஒரே முறையில் தெளிவாக படமாக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒரு நிமிட உரையை, வாட்ஸ்அப், வைபர் அல்லது மின்னஞ்சல் மூலம் 2020 ஜூன் 15ம் திகதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

### இப்போட்டியில் பங்குபெறுவது மிகவும் சுலபமானது!

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

- கொடுக்கப்பட்ட தலைப்பை நன்றாக வாசித்து புரிந்து கொள்ளுங்கள். கோவிட் - 19 குறித்து ஆய்வு செய்து உங்கள் உரையைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் உரையில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய அம்சங்களை தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- தமிழ் மொழியில் உங்கள் உரையைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- பயனுள்ள சொற்களையும் சைகைகளையும் பயன்படுத்தி உங்கள் பேச்சை உயிரூட்டம் உள்ளதாக்க மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யுங்கள். உங்கள் எண்ணங்களை உடல்மொழி (அங்க அசைவுகள்) மூலமும் வெளிப்படுத்துங்கள்
- உங்கள் பேச்சை ஒரு நிமிடத்திற்குள் மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.
- உங்கள் பேச்சை ஒரு நிமிட வீடியோவாக பதிவு செய்து சேமித்துக்கொள்ளுங்கள்.
- வீடியோ கிளிப்பை ECPAT Sri Lanka வுக்கு வாட்ஸ்அப், வைபர் அல்லது மின்னஞ்சல் மூலம் 2020 ஜூன் 15ம் திகதிக்குள் அனுப்பிவையுங்கள்.
- அனுப்ப வேண்டிய வாட்ஸ்அப் மற்றும் வைபர் எண் (தமிழ்) - 071 295 0615
- மின்னஞ்சல்: ecpatlk@gmail.com

**வேறு ஊடகங்கள் வழியாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

## யார் இந்த போட்டியில் பங்குகொள்ளலாம்?

## வயது பிரிவுகளும் தலைப்புகளும்

1வது பிரிவு 08-10 வயது வரை: **கொரோனா காலம் மகிழ்ச்சியானதா, சோகமானதா…. ஏன்?**

2வது பிரிவு 11-13 வயது வரை: **கொரோனாவுடன் வாழ்க்கை… புதிதானது**

3வது பிரிவு 14-16 வயது வரை: **கோவிட் - 19 ஒரு சவாலா அல்லது ஒரு வாய்ப்பா**

## பணப் பரிசுகள்:

ஒவ்வொரு பிரிவிலும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு வென்றவர்களுக்கு முறையே ரூபா 10,000, ரூபா 7,500 மற்றும் ரூபா 5,000 வழங்கப்படும்.

## போட்டிக்கான விதிகள்:

1. குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட அனைத்து சிறுவர்களும் (ஆண், பெண்) பங்குகொள்ளலாம்.
2. ஒவ்வொரு விண்ணப்பமும் குறிப்பிட்ட சிறுவரின் சுய ஆக்கமாக இருக்க வேண்டும்.
3. ஒரு போட்டியாளருக்கு ஒரு பதிவை மட்டுமே சமர்ப்பிக்க அனுமதிக்கப்படும்.
4. போட்டியாளர் போட்டியில் பங்குகொள்ள அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும்.
5. விண்ணப்பங்களை 2020 ஜுன் 15 நள்ளிரவுக்குள் பெற கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
6. போட்டியாளர்கள் சமர்ப்பிக்கும் வீடியோ தெளிவான ஒரே எடுப்பில் படமாக்கப்பட்ட உரை நிகழ்த்தும் வீடியோவாக இருக்க வேண்டும் (இருப்பினும், பங்கேற்பாளர்கள் பல முறை வீடியோ எடுத்து பயிற்சி செய்யலாம்).
7. பகுதி பகுதியாக எடுத்து இணைக்கப்பட்ட அல்லது திருத்திய வீடியோக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. வீடியோவின் நீளம் ஒரு நிமிடத்திற்குள் இருக்க வேண்டும்.
9. போட்டியாளர்கள் சரியான முறையில் ஆடை அணிந்திருக்க வேண்டும் (குட்டை பாவாடை, கட்டை காற்சட்டை போன்றவைகளை தவிர்த்துக் கொள்ளவும்).
10. வாட்ஸ்அப், வைபர் மற்றும் மின்னஞ்சல் ஊடாக வரும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் பிற முறைகள் வழியாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
11. போட்டியுடன் தொடர்புடைய தொலைபேசி எண்ணுக்கு, போட்டிக்கு முன்போ அல்லது அதற்கு பின்னரோ மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு பதிலளிக்கப்பட மாட்டாது.
12. தமிழ் மொழியில் உரையை நிகழ்த்த வேண்டும்.
13. போட்டியாளர் வீடியோவில் தனது பெயர், தான் கற்கும் வகுப்பு மற்றும் பாடசாலையை ஒரு சுருக்கமான அறிமுகமாக சேர்க்க வேண்டும்.
14. போட்டியாளரின் பெயர், பிறந்த திகதி, பாடசாலை பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகிய விவரங்களை வீடியோவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.
15. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## வெற்றியாளர்களை தீர்மானிக்கும் அளவுகோல்கள்:

- உரையில் வழங்கப்பட்ட கருத்துக்களும் தலைப்புடனான அவற்றின் தொடர்புகளும்.
- தெளிவும் பரிமாணமும்.

- உச்சரிப்பு மற்றும் தொனிகள்.
- பேச்சின் நயம்.
- ஏற்றத்தாழ்வும் வேகமும்.
- கண் தொடர்பு (கேமராவை பார்த்து பேசுவது).
- ஒட்டுமொத்த சமர்ப்பணம்.
- முதல் பெயர், வயது மற்றும் பாடசாலை ஆகியவை அடங்கும் குறுகிய சுய அறிமுகம்.

வெற்றியாளர்களை சுயாதீன நடுவர்கள் குழுவே தேர்ந்தெடுக்கும். தாமதமான விண்ணப்பங்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வெற்றியாளர்கள் 2020 ஜூலை 06ம் திகதிக்குள் ECPAT Sri Lanka - PEaCE பேஸ்புக் பக்கத்தில் அறிவிக்கப் படுவார்கள். வெற்றி பெற்ற உரைகளின் வீடியோக்கள் வெற்றியாளர்களின் விவரங்களுடன் ECPAT Sri Lanka – PEaCE முகநூல் பக்கம் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.